முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

OS. 30/2022

2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் நாள் வா.த.சா 1-ன் வாக்குமூலம்

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி முதன்மை மாவட்ட நீதிபதி திரு.எஸ்.ஜவகர், B.L., அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஈஸ்வரன் | வயது | : | 47 |
| தந்தை/கணவர் பெயர் | : | அருணாச்சலம் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

1 முதல் 4 பிரதிவாதிதரப்பில் குறுக்கு விசாரணை- நான் ஐ.டி.ஐ முடித்துள்ளேன். வழக்கு சொத்து சுப்பம்மாள் என்பவருக்கு பாத்தியமானது என்றால் சரியல்ல, என் அம்மா சுசீலாவிற்கு சொந்தமான சொத்து. சுசீலாவிற்கு அது தான சொத்து. யார் எழுதி வைத்தார் என்றால் பாட்டி சுப்பம்மாள் எழுதி வைத்தார். சுப்பம்மாளுக்கு 4 பிள்ளைகள். சுசீலா, நடராஜன், ஜெகந்நாதன், ராமலிங்கம் ஆகியோர். சுப்பம்மாள் சொத்து எழுதி வைத்தும் சொத்தின் ஆவணம் சுப்பம்மாளிடம்தான் இருந்தது என்றால் சரியல்ல, என் அம்மாவிடம்தான் இருந்தது. சொத்தின் சுவாதீனம் சுப்பம்மாளிடம் இருந்தது என்றால் சரியல்ல, என் அம்மாவிடம் இருந்தது. வழக்கு சொத்தில் என் அம்மா 15 வருடமாக அனுபவத்தில் இருந்தார். வழக்கு சொத்தில் என் அம்மா அனுபவத்தில் இருந்ததற்கான

ஆதாரங்கள் தாக்கல் செய்யவில்லை. மின்கட்டண ரசீதோ, வீட்டு வரி ரசீதோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்திருக்கிறோம். சுப்பம்மாள் என் அம்மாவிற்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட்டை ரத்து செய்த விவரம் எனக்கு தெரியாது. தான செட்டில்மெண்ட்டை ரத்து செய்த விவரம் என் தந்தை அருணாச்சலம், வாதிகள் அனைவருக்கும் தெரியும் என்றால் சரியல்ல. பத்திரம் ரத்து செய்யும்போது வழக்கு சொத்தில் சுப்பம்மாள் குடியிருந்தார். எனது மாமா குடியிருந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேன். என் தந்தை 2013 ல் இறந்தார். என் தாயார் 2008 ல் இறந்தார், ஆனால் சரியான தேதி தெரியவில்லை. 06.02.2003 ல் இறந்தார் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் மாடியில் நாங்கள் அறை கட்டவில்லை என்றால் சரியல்ல, சுப்பம்மாள்தான் கட்டினார் என்றால் சரியல்ல. நான் நெய்வேலியில் குடியிருக்கிறேன். என் அப்பா, அம்மா குறிஞ்சிப்பாடி பெரியார் நகரில் குடியிருந்தார்கள். அவர்கள் பெரியார் நகரில் குடியிருந்தபோதுதான் சகோதரிகளுக்கு திருமணம் நடந்தது. வழக்கு சொத்தில் குடியிருக்கும்போது சகோதரிகளுக்கு திருமணம் நடந்ததாக வாக்குமூலத்தில் பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. சுப்பம்மாள் வழக்கு சொத்தை ரத்து செய்த பிறகு 23.12.2010 ல் என் மாமா நடராஜன் பையன் லோகநாதன் பெயரில் ஒரு உயில் எழுதி வைத்தாரா என்று எனக்கு தெரியாது. சுப்பம்மாள் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் சரிதான். சுப்பம்மாளை சென்னை ராமச்சந்திரா மருத்துவமனை, பாண்டி ஜிப்மர் மருத்துவமனை, நெல்லை அரசு மருத்துவமனை, சென்னை மியாட் மருத்துவமனை களில் சேர்க்கப்பட்டு 1, 2

பிரதிவாதிகள்தான் செலவு செய்தார்கள் என்றால் சரியல்ல. என் நடுமாமா ஜெகந்நாதன்தான் என்எல்சி எம்ப்ளாயர் மூலமாக செலவு செய்தார். என் பாட்டி சுப்பம்மாள் 2019 ல் இறந்தார். 2003 லிருந்து தாவா சொத்தில் பாட்டி சுப்பம்மாள் 2019 வரை குடியிருக்கும்போது என் அம்மா சொத்து என்று அவரை காலி செய்ய சொல்லி நடவடிக்கை எடுக்கவில்லை, குடியிருக்க சொல்லி நாங்கள் தான் சொன்னோம். நடுமாமா வீட்டிலும், சின்ன மாமா வீட்டிலும் இருப்பார். தாவா சொத்தில்தான் நிரந்தரமாக இருந்தார். தானசெட்டில்மெண்ட் ரத்து செய்த பிறகு வழக்கு சொத்து பற்றி என் தந்தை நடவடிக்கை எடுக்கவில்லை. அதன்பிறகு நடராஜன் வழக்கு சொத்தில் இருந்தார். நடராஜன் வழக்கு சொத்தில் இருந்ததற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். சுப்பம்மாள் குடியிருந்ததற்கு 2012 லிருந்து 2021 வரை மின்கட்டண ரசீதுகள் இருந்தது என்றால் சரிதான். அவர் பெயரில் இருந்தது என்றால் எனக்கு தெரியாது. அவர் பெயரில் இருந்தது நன்றாக தெரியும் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பொறுத்து 14.06.2019 ல் 1 ஆம் பிரதிவாதிக்கு உயில் எழுதி வைத்திருக்கிறார் என்றால் தெரியாது. 1 ஆம் பிரதிவாதி பெயரில் தான் பட்டா மாறி இருக்கிறது என்றால் சரியல்ல. என் அம்மா பெயரில் உள்ளது. 1 ஆம் பிரதிவாதி வழக்கு சொத்தை பொறுத்து தற்போது மின்கட்டணம் ரசீது, வீட்டு வரி ரசீது, தண்ணீர் வரி ரசீது, பட்டா உள்ளது என்றால் அதன் பிறகு மாற்றி விட்டார்கள். 1 ஆம் பிரதிவாதி 4 ஆம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்தை கடந்த 02.11.2021 ல் அடமானம் வைத்துள்ளார் என்றால் சரிதான். என் தாயார் இறந்து 20 ஆண்டுகள் கழித்துதான் இந்த

வழக்கு தாக்கல் செய்யப்படுகிறது என்றால் சரிதான். ஜெகந்நாதன் மருமகள்கள் பெயர்கள் 1. சுபலட்சுமி, 2. நித்யகல்யாணி. நித்ய கல்யாணி என்பவர் இதே நீதிமன்றத்தில் ஓ.எஸ்.20/2022-ல் ஒரு வழக்கு தாக்கல் செய்திருக்கிறாரா என்று எனக்கு தெரியாது. நித்யகல்யாணி அவருடைய மாமனார் ஜெகந்நாதன் தூண்டுதலின்பேரில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்து 12 ஆண்டுகள் கழித்துதான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, செட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்தது தெரியாது. என் தாயார் உடல்நிலை சரியில்லாமல் இறந்தார்.

5, 6 பிரதிவாதிதரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை